International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

ஹைக்கூ கவிதைகளில் இயற்கையும் வாழ்வியலும்

ச. ஜானகி
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 232506A037

முனைவர் வே. மணிகண்டன்
துறைத்தலைவர் & இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
(அண்ணாமலை பல்கலைக்கழகம்), விழுப்புரம்

ஆய்வுச் சுருக்கம்

இயற்கையும் மனித வாழ்வியலும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி பின்னிப்பிணைந்தவை. நவீன இயந்திரமயமான சூழலில் மனிதன் இயற்கையிடமிருந்து முற்றிலுமாக விலகிச் செல்லும் அபாயகரமான போக்கினைச் சமகால ஹைக்கூ கவிதைகள் மிகக் கூர்மையாக விமர்சிக்கின்றன. இக்கட்டுரை, ஹைக்கூ கவிதைகளில் இயற்கை எங்ஙனம் மனிதவாழ்வியலோடும் சமூக எதார்த்தங்களோடும் இயைந்துப் படைக்கப் பட்டுள்ளது என்பதை ஆழமாக ஆராய்கிறது. தற்காலத் தமிழ் ஹைக்கூ கவிதைகள் வெறும் ரசனை சார்ந்த ஜப்பானிய மரபிலிருந்து விடுபட்டு, மாபெரும் சமூக ஆயுதமாக உருமாறியுள்ளன. இயற்கை கற்பிக்கும் நம்பிக்கையின் தொடர்ச்சி, முதியோரின் அதீத உளவியல் தனிமை, அழகியலுக்குப் பின்னால் மறையுண்டு கிடக்கும் உழைக்கும் வர்க்கத்தின் வலி, நகரமயமாக்கலால் ஏற்படும் சூழலியல் அழிவு மற்றும் பறவைகளின் துயரம் ஆகிய பன்முகத் தளங்களில் இக்கட்டுரை பயணிக்கிறது. மேலும், மனிதனின் அகங்காரத்தை உடைக்கும் இயற்கையின் பேராற்றல், வறுமையின் கொடூர எதார்த்தம், விளிம்புநிலை மக்கள் மீது இயற்கை காட்டும் பாரபட்சமற்ற அரவணைப்பு, பாறையைத் பிளக்கும் விடாமுயற்சி மற்றும் அக அமைதிக்கான மௌன மொழி ஆகியவை இதில் விரிவாகப் பகுத்தாராயப்பட்டுள்ளன. முடிவாக, சூழலியல் அறம் மற்றும் உயிரிரக்கம் சார்ந்த விழுமியங்களை முன்னிறுத்தும் தற்கால ஹைக்கூ கவிதைகள், மனிதனை மீண்டும் இயற்கைக்கு அழைத்துச் சென்று வாழ்வியல் நெறிகளைப் போதிக்கும் மாபெரும் வழிகாட்டியாகத் திகழ்கின்றன என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

முதன்மைச் சொற்கள்: ஹைக்கூ, வாழ்வியலும் இயற்கையும், சூழலியல், விளிம்புநிலை

முன்னுரை

தமிழ் இலக்கிய மரபு என்பது இயற்கையை வணங்கித் தொடங்கிய மரபாகும். சங்க இலக்கியத்தின் திணைக் கோட்பாடுகள் நிலத்தையும் பொழுதையும் மனித உணர்வுகளோடு இணைத்துப் பார்க்கும் பாங்கு உலக இலக்கியத்திற்கே முன்னோடியானது. இயற்கையை வெறும் பின்னணிச் சூழலாக மட்டும் பார்க்காமல், அதனைத் தன் உயிர் மூச்சாகக் கருதியவன் தமிழன். கால மாற்றத்தில் இலக்கிய வடிவங்கள் மாறினாலும், இயற்கையைப் பாடும் மரபு மட்டும் மாறவே இல்லை. இத்தகையப் பாரம்பரியமான பண்பாட்டினைப்

போற்றி, அதனோடு ஒன்றிணைந்துத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதும் தமிழர்களின் மாறாதப் பண்பாகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழில் வேரூன்றிய ஹைக்கூ வடிவம், இந்தத் தொன்மையான இயற்கை மரபினை நவீனக்கவிதைச் சூழலில் புதியப் பரிமாணத்தோடுத் தொடர்கிறது. மனித வாழ்வின் போராட்டங்களையும், சமூக அவலங்களையும் இயற்கையின் குறியீடுகள் வழியாகப் பேசும் கருவியாகத் தற்கால ஹைக்கூக்கள் திகழ்கின்றன.

இயற்கை அறமும் நம்பிக்கையும்

இயற்கை எப்பொழுதும் தன் சுழற்சியை நிறுத்திக் கொள்வதில்லை. ஓர் உயிரின் அல்லது ஒரு பொருளின் இறுதித் தருவாயி லும் கூட, அது அடுத்தப் படிநிலைக்கான நம்பிக்கையை விதைத்துவிட்டேச் செல்கிறது. வாழ்வின் மீது மனிதன் கொள்ளும் நம்பிக்கையை விட, இயற்கையின் மீது மற்ற உயிரினங்கள் கொள்ளும் நம்பிக்கை மிகவும் ஆழமானது.

உதிரும் பூக்கள்

வருந்துவதில்லை செடி

பூக்கும் நம்பிக்கை (மழைச்சாலையில் நிலாப் பூக்கள், ப.108)

ஒரு செடியில் உள்ள பூக்கள் உதிர்வது என்பது அழிவின் அடையாளம் அல்ல. அது இயற்கையின் தவிர்க்க முடியாத சுழற்சி. உதிரும் பூக்களைக் கண்டு செடி ஒருபோதும் வருந்துவதில்லை. ஏனெனில் மீண்டும் தன்னிடம் புதிய பூக்கள் மலரும் என்ற ஆழமான நம்பிக்கை அந்தச் செடிக்கு உண்டு. இது மனித வாழ்வியலுக்கான மிகச் சிறந்த உருவகமாகும். வாழ்வில் ஏற்படும் இழப்புகளைக் கண்டு மனிதன் சோர்வடையக் கூடாது. ஒரு வாய்ப்பு பறிபோனால், அதை விடச் சிறந்த வாய்ப்பு மீண்டும் துளிர்விடும் என்ற நம்பிக்கையோடு பயணிக்க வேண்டும் என்பதை இயற்கை இங்குக் கற்பிக்கிறது.

ஒவ்வொரு நொடியையும் பயனுள்ளதாகவும் அறம் சார்ந்ததாகவும் மாற்றுவதே தனி மனிதனின் பொறுப்பாகும் (வாழ்வியல் தத்துவங்கள், ப.101)

ஒரு செடியானது உதிர்ந்த பூக்களுக்காகக் கவலைப்பட்டுத் தன் காலத்தை வீணடித்துக் கொண்டு நிற்பதில்லை. மாறாக, அது அடுத்த கணமே மீண்டும் துளிர்விடுவதற் கான வேலையைத் தன் இயற்கையான அறத்தோடு தொடங்கிவிடுகிறது. அது போலவே, மனிதனும் கடந்த காலத் தோல்வி களையோ, இழப்புகளையோ நினைத்துத் தன் நிகழ்காலத்தை முடக்கிக் கொள்ளக் கூடாது.

காலம் என்பது எவருக்காகவும் காத்திருப்ப தில்லை. எனவே, கடந்து செல்லும் ஒவ்வொரு விநாடியையும் தனக்கும் தன்னைச் சார்ந்த சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் மாற்றுவது ஒவ்வொரு மனிதனின் தலையாயக் கடமையாகும். மேலும், அந்தச் செயல் பாடுகள் வெறும் பொருள் தேடும் சுயநலப் பயணமாக மட்டும் சுருங்கிவிடாமல், அறநெறி சார்ந்ததாக அமைய வேண்டும். இயற்கை யானது எவ்வாறு எந்தவித எதிர்பார்ப்பு மின்றித் தன் கடமையைச் செவ்வனே செய்து ஒரு மாபெரும் ஈகை அறத்தை நிலைநாட்டு கிறதோ, அதேபோலத் தனிமனிதனும் தனக்குக் கிடைத்துள்ள ஒவ்வொரு நொடியை யும் பொறுப்புணர்வுடனும், சமூக அறத்துட னும் எதிர்கொண்டு செயல்பட வேண்டும்

தனிமையும் உளவியலும்

இயந்திரமயமான வாழ்வில் மனிதன் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்தா லும், உளவியல் ரீதியாகப் பெரும் தனிமைக்குள் தள்ளப்பட்டுள்ளான். கூட்டுக் குடும்பமுறை சிதைந்து, தனிக்குடித்தனங்கள் பெருகியதன் விளைவாக, வீடுகளில் முதியவர்கள் தனித்து விடப்படும் அவலம் இன்று சமூகத்தின் ஆறாத வடுவாக மாறியுள்ளது. உறவுகளின் பிரிவால் ஏற்படும் இந்த மன அழுத்தத்தையும், தனிமையின் கொடூரத்தையும் ஹைக்கூ கவிதைகள் மிகக் கூர்மையாகப் பதிவு செய்கின்றன.

யாருமில்லாத வீட்டில்

பேசிக் கொண்டிருக்கும்

அந்தக் கிழவி (பாசிக்குளத்தை துயிலெழுப்பும் தவளை, ப.10)

இந்தக் கவிதை முதியவர்களின் அதீதத் தனிமையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. பேச ஆளின்றி, தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்ளும் நிலைக்கு முதியவர்கள் தள்ளப்பட்டிருப்பது, சமூகத்தின் அற வீழ்ச்சியைக் காட்டுகிறது.

"மனித விழுமியங்கள் சிதைவுறும் போது,

தனிமை என்பது மனிதர்களுக்கு வழங்கப் படும் மிகக் கொடிய தண்டனையாக மாறுகிறது" (மனித விழுமியங்கள், ப. 170)

என்ற கூற்று ஆழமான பொருளைப் பெறுகிறது. கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து, மனிதர்கள் காகிதப் பணத்தின் பின்னால் இயந்திரங்களாக ஓடிக்கொண்டிருக்கும் நவீனச் சூழலில், அன்பும் கவனிப்பும் என்ற அடிப்படை மனித விழுமியங்கள் முற்றிலு மாகக் காணாமல் போய்விட்டன. தங்களின் வாழ்நாள் முழுவதையும் பிள்ளைகளுக்காக வும் குடும்பத்திற்காகவும் தியாகம் செய்த முதியவர்கள், தங்கள் இறுதி நாள்களில் ஒரு வார்த்தை பேசுவதற்குக்கூட ஆளின்றித் தனித்து விடப்படுகிறார்கள். யாருமில்லாத வீட்டில் அந்தக்கிழவி தனக்குத்தானே பேசிக் கொள்வது வெறும் பிதற்றல் அல்ல. அது அந்த வெற்றிடத்தின் நிசப்தத்தைத் தாங்க முடியாமலும், எவரேனும் தன்னிடம் ஒரு வார்த்தை பேசமாட்டார்களா என்ற ஏக்கத்தின் பெருவெளிப்பாடாகவும் அமைகிறது.

இயற்கையும் உழைக்கும் வர்க்கமும்

ஹைக்கூ கவிதைகள் இயற்கையின் அழகை மட்டுமே பாடும் என்ற மரபை உடைத்து, இயற்கையின் பின்னணியில் மறைந்திருக்கும் உழைக்கும் வர்க்கத்தின் வலிகளைத் தற்காலக் கவிதைகள் பேசுகின்றன. பசுமை யான மலைகளையும், தேயிலைத் தோட்டங் களையும் காணும் போது மனித மனம் ரசனையில் ஆழ்கிறது. ஆனால், அந்தப் பசுமைக்குப் பின்னால் உள்ள தொழிலாளர் களின் வியர்வையையும், சுரண்டலையும் ஒரு கவிஞனின் கண் மட்டுமே காண்கிறது.

பசுமைத் தேயிலை

மலைதோறும் தெரியும்

தொழிலாளர் உழைப்பு (பாசிக்குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி, ப.17)

தேயிலை மலைகளின் பசுமை என்பது இயற்கையின் கொடை மட்டுமல்ல. அது பல நூறு தொழிலாளர்களின் உழைப்பால் செதுக்கப்பட்டது என்பதை இக்கவிதை உரைக்கிறது. சமூகத்தில் விளிம்புநிலை மக்களின் உழைப்பு எவ்வாறு மேல்தட்டு மக்களால் நுகரப்படுகிறது என்ற மார்க்சியச் சிந்தனையை இக்கவிதை இயற்கையின் குறியீடாக முன்வைக்கிறது. அழகியலுக்குப் பின்னால் உள்ள உழைப்பின் மேன்மையைச் சமூகத்திற்கு உணர்த்தும் இத்தகைய கவிதைகள், மனித நேயத்தை வளர்க்கும் ஆயுதங்களாகச் செயல்படுகின்றன என்பதை,

"மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு உருகும் மனமே மனிதநேயத்தின் ஊற்றுக் கண் ஆகும்" (ஹைக்கூ கவிதைகளில் சமுதாயம், ப.62)

இயற்கையின் அழகியலை ரசிப்பது மனித இயல்பு. ஆனால் அந்த அழகியலுக்குப் பின்னால் இருக்கும் சக மனிதனின் வலியை உணர்ந்து, அவர்களுக்காக இரங்குவதே உண்மையான மனிதநேயமாகும். சமூகத்தில் விளிம்புநிலை மக்களின் உழைப்பு எவ்வாறு மேல்தட்டு மக்களால் நுகரப்படுகிறது என்ற சிந்தனையை இயற்கையின் குறியீடாக முன்வைக்கும் இக்கவிதை, வாசகர்களின் மனதில் சக மனிதர்கள் மீதான ஆழமான பரிவையும் மனிதநேயத்தையும் ஒருங்கே தோற்றுவிக்கிறது. ஒரு சிறந்த இலக்கியம் என்பது வெறுமனே அழகைப் பாடுவதல்ல. அது பிறரின் துயரைக் கண்டு உருகும் மனிதநேயத்தை உருவாக்குவதே ஆகும்.

சூழலியல் அழிவு

இயற்கை வளங்களை மனிதன் தன் சுய நலத்திற்காக அழித்து வருவதைத் தற்கால ஹைக்கூக்கள் சூழலியல் அறத்தோடு எதிர்க்கின்றன. நகரமயமாக்கலின் விளைவாக விளைநிலங்கள் அனைத்தும் கான்கிரீட் கட்டிடங்களாக மாறிவிட்டன. பல ஆயிரம் மைல்கள் கடந்து வரும் வலசைப் பறவைகள், தங்களின் பழைய வாழ்விடங்களைத் தேடி வரும்போது ஏமாற்றத்தையே சந்திக்கின்றன.

ஊர்களான வயல்களை

பார்த்துக்கொண்டே பறந்தது

வலசைப் பறவைகள் (பாசிக்குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி, ப.33)

வயல்வெளிகள் ஊர்களாகவும், மனைகளாக வும் மாறிவிட்ட அவலத்தை இக்கவிதை சுட்டுகிறது. பறவைகளின் இருப்பிடங்களை அழித்துவிட்டு மனிதன் எழுப்பும் எந்தவொரு நாகரிகமும் முழுமையானதல்ல.

இயற்கையைச் சிதைத்து எழுப்பப்படும் எந்தவொரு கட்டுமானமும் மனித குலத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கும்

(சூழலியல் சிந்தனைகள், ப.112)

என்ற சூழலியல் மனிதன் தன் அற்பத் தேவைகளுக்காகவும், நகரமயமாக்கல் என்ற ஆடம்பரத்திற்காகவும் விளைநிலங்களையும் நீர்நிலைகளையும் இரக்கமின்றி அழித்துக் கட்டிடங்களை எழுப்புகிறான். இன்று வலசைப் பறவைகளுக்கு நேர்ந்த இந்த வாழ்விட இழப்பு, நாளை ஒட்டுமொத்த மனித குலத்திற்குமான உணவுப் பஞ்சமாகவும், தட்பவெப்பநிலை மாற்றத்தின் பேரிழப்பாகவும் மாறும் அபாயம் இதில் மறைந்துள்ளது. இயற்கையின் சமநிலையைக் குலைத்து உருவாக்கப்படும் செயற்கையான கட்டமைப் புகள், மனிதனின் தற்காலிக வளர்ச்சியைப் போலத் தோன்றினாலும், நீண்ட நோக்கில் மனித சமுதாயத்தின் வேரையே அழித்து விடும் என்ற மாபெரும் சூழலியல் எச்சரிக்கையை இக்கவிதையும் மேற்கோளும் இணைந்து உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

இயற்கையின் பேராற்றல்

மனிதன் தன் அறிவியல் வளர்ச்சியால் இயற்கையைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டதாகக் கருதுகிறான். ஆனால், இயற்கையின் பேராற்றலுக்கு முன்னால் மனிதனின் செருக்கு ஒன்றுமில்லா மல் போவதைக் கவிஞர்கள் அங்கதச் சுவையோடு பதிவு செய்கின்றனர். இயற்கையை எவ்வளவுக்கு எவ்வளவு மனிதன் உதாசீனப்படுத்துகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது விஸ்வரூபம் எடுத்து அவனது அறியாமையை உணர்த்துகிறது.

தூக்கி எறிந்தவர்கள்

அண்ணாந்து பார்க்கிறார்கள்

விதையின் விழிப்பு (பாசிக்குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி, ப.130)

பயனற்றது என்று மனிதர்களால் தூக்கி எறியப்பட்ட ஒரு சிறிய விதை, மண்ணில் விழுந்து மாபெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. அதனைத் தூக்கி எறிந்த மனிதனே, அந்த மரத்தின் பிரம்மாண்டத்தைக் கண்டு அண்ணாந்து பார்க்கும் நிலை ஏற்படுகிறது. இது மனிதனின் அகங்காரத்தின் மீதான இயற்கையின் வெற்றியாகும். தங்களைச் சிறியவர்கள் என்று உதாசீனப்படுத்திய சமூகத்தின் முன்னால், ஒரு மனிதன் தன் உழைப்பால் உயர்ந்து நிற்கும் வாழ்வியல் தத்துவத்தையும் இக்கவிதை குறியீடாக உணர்த்துகிறது. இதனை,

இயற்கையின் சிறு அசைவுகளும் மனித அகங்காரத்தை உடைக்கும் குறியீடுகளா கவே செயல்படுகின்றன" (புதுக்கவிதையில் குறியீடுகள், ப.55)

என்ற கூற்று இக்கவிதைக்கு அரணாக அமைகிறது. மனிதன் தன் அறிவியல் வளர்ச்சியாலும், ஆதிக்க மனப்பான்மை யாலும் இயற்கையையே வென்றுவிட்டதாகச் செருக்குக் கொள்கிறான். ஆனால், இயற்கையோ எவ்வித ஆரவாரமுமின்றி, ஒரு சிறிய விதையின் முளைப்பு என்னும் மிக நுட்பமான சிறு அசைவின் மூலம் மனிதனின் அந்த அகங்காரத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிகிறது.

தங்களை விடச் சிறியவர்கள் மற்றும் எளியவர்கள் என்று சமூகத்தால் உதாசீனப் படுத்தப்பட்ட மனிதர்கள், தங்களின் விடாமுயற்சியால் மாபெரும் உயரத்தை அடைந்து, தங்களை அவமதித்தவர்களையே அண்ணாந்து பார்க்கச் செய்வார்கள் என்ற ஆழமான வாழ்வியல் தத்துவத்தையும் இக்கவிதை ஒரு குறியீடாக உணர்த்துகிறது. இயற்கையின் பேராற்றலுக்கு முன்னால் மனிதனின் செருக்கு ஒன்றுமில்லாமல் போகும் என்பதை இக்கவிதையும் மேற்கோளும் மிக ஆழமாகப் பதிவு செய்கின்றன.

வறுமையின் எதார்த்தமும் வாழ்வியல் போராட்டமும்

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தில், வறுமை என்பது விளிம்புநிலை மக்களின் அன்றாடப்போராட்டமாக உள்ளது. அடிப்படைத் தேவைகளான உணவு, நீர் ஆகியவற்றை அடைவதற்குக் கூட அவர்கள் படும் பாட்டினை ஹைக்கூ கவிதைகள் மிகவும் எதார்த்தமாகப் படம்பிடிக்கின்றன.

தண்ணீர்த் தொட்டி

நிரம்பிக் கொண்டிருக்கிறது

அவ்வப்போது வயிறு (மழைச்சாலையில் நிலாப்பூக்கள், ப.101)

ஒருபுறம் வசதியானவர்களின் வீடுகளில் தண்ணீர்த் தொட்டிகள் நிரம்பி வழிகின்றன. மறுபுறம் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் வயிறு எப்போதாவதுதான் நிரம்புகிறது. சமூகத்தின் வளங்கள் எவ்வாறு சமனற்ற முறையில் பகிரப்பட்டுள்ளன என்பதை இக்கவிதை ஆழமாக விமர்சிக்கிறது.

சமூகத்தின் அடித்தட்டு மக்களின் பசியைப் பேசாத எந்த இலக்கியமும் முழுமையடையாது (தமிழ் இலக்கியத்தில் அறம், ப.142)

ஒரு சிறந்த இலக்கியம் என்பது வெறும் கற்பனை உலகத்தில் சஞ்சரித்து அழகியலைப் பாடுவது மட்டுமல்ல; அது சக மனிதனின் பசியையும், வறுமையையும், விளிம்புநிலை மக்களின் கண்ணீரையும் சமூகத்தின் மனசாட்சிக்குக் கொண்டு செல்லும் கருவியாகச் செயல்பட வேண்டும்.

உண்ண உணவு கிடைக்காத ஒரு மனிதனின் பசியைப் பதிவு செய்யத் தவறும் இலக்கியம், அறமற்ற சமூகத்தின் அடையாளமாகவே கருதப் படும். வர்க்கப் பிரிவினைகளால் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வை வெறும் மூன்று வரிகளில் தோலுரித்துக் காட்டும் இத்தகைய ஹைக்கூ கவிதைகளே, தமிழ் இலக்கியத்தின் சமூக அறத்தை முழுமையடையச் செய்கின்றன.

இயற்கையின் முரண்

இயற்கை என்பது எப்போதும் அமைதியான, மென்மையானத் தன்மையைக் கொண்டிருப் பதில்லை. அது ஆக்கமும் அழிவும் கலந்த ஒரு மாபெரும் முரண்பாடுகளின் தொகுப்பா கும். ஒருபுறம் உயிர்களை வளர்க்கும் தாய்மையைக் கொண்ட இயற்கை, மறுபுறம் பேரழிவை ஏற்படுத்தும் சீற்றத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த முரண்பாடுகளைப் புரிந்துகொள்ளும் போது தான் மனிதன் வாழ்வின் நிலையாமையை முழுமையாக உணர்கிறான்.

மரத்தைச் சாய்த்து விட்டு

மழையைப் பொழிகிறது

வேரறுத்த புயல் (மழைச்சாலையில் நிலாப் பூக்கள், ப.119)

ஒரு புயல் வீசும்போது அது பெரும் மரங்களை வேரோடு சாய்த்து அழிக்கிறது. அதே புயல்தான் மழையைக் கொண்டுவந்து பூமிக்குப் புதிய உயிர்ப்பையும் தருகிறது. அழிவும் ஆக்கமும் இயற்கையின் இரு கரங்கள் என்பதை இக்கவிதை உணர்த்து கிறது. மனித வாழ்விலும் பெரும் துயரங்கள் வரும்போது, அவை சிலவற்றை அழித்தாலும், புதிய அனுபவங்களையும், மாற்றங்களையும் மழையாகப் பொழிந்துவிட்டேச் செல்கின்றன என்ற தத்துவத்தை இக்கவிதை போதிக்கிறது.

இயற்கையின் முரண்பாடுகளைப் புரிந்து கொள்ளும் போதுதான் மனிதன் வாழ்வின் நிலையாமையை முழுமையாக உணர்கிறான் (இக்காலக் கவிதைகளில் இயற்கை, ப.42)

என்ற சிந்தனை இக்கவிதைக்கு தத்துவார்த்த விளக்கமாக அமைகிறது. இயற்கை என்பது எப்போதுமே அமைதியான, மென்மையானத் தன்மையை மட்டுமே கொண்டிருப்பதில்லை. அது ஆக்கமும் அழிவும் கலந்த ஒரு மாபெரும் முரண்பாடுகளின் தொகுப்பாகும். இயற்கையின் இந்தப் பிரம்மாண்டமான முரண்பாடுகளை உற்றுநோக்கும்போது, உலகில் எதுவும் நிரந்தரமில்லை என்ற பேருண்மை மனிதனுக்குப் புலப்படுகிறது.

புயலின் இந்த முரண்பட்ட செயலைப் போலவே மனித வாழ்வும் அமைந்துள்ளது. மனித வாழ்வில் வீசும் பெரும் துயரங்களும் இழப்புகளும் சில நேரங்களில் நமது இருப்பையே வேரோடு சாய்த்து அழிப்பது போலத் தோன்றினாலும், அவை புதிய அனுபவங்களையும், மன முதிர்ச்சியையும், வாழ்வின் மாற்று வழிகளுக்கானத் தெளிவை யும் மழையாகப் பொழிந்துவிட்டேச் செல்கின்றன. இன்பம் - துன்பம், ஆக்கம்-அழிவு ஆகிய இருவேறு முரண்பாடுகளை யும் சமநிலையில் ஏற்றுக்கொண்டு கடந்து செல்வதே, வாழ்வின் நிலையாமையைப் புரிந்துகொண்ட ஒரு பக்குவமான மனிதனின் இயல்பாகும் என்ற மாபெரும் தத்துவத்தை இக்கவிதையும் மேற்கோளும் இணைந்து போதிக்கின்றன.

இயற்கையின் அரவணைப்பு

மனிதர்கள் சாதி, மதம், பொருளாதாரம் எனப் பல பிரிவுகளால் தங்களுக்குள் ஏற்றத் தாழ்வுகளைப் பாராட்டினாலும், இயற்கை எவ்விதப் பாகுபாடும் இன்றி அனைவரையும் சரிசமமாகவே அரவணைக்கிறது. வசதி படைத்தவர்களுக்கும், வீடின்றிச் சாலையோ ரத்தில் வசிப்பவர்களுக்கும் இயற்கையின் கொடைகள் சமமானவையே.

தொட்டிலில் குழந்தை

எட்டிப்பார்க்கும் நிலா

சாலையோரக் குடும்பம் (ஊஞ்சலாடும் ஊசித் தும்பிகள், ப.46)

சாலையோரத்தில் வாழும் ஒரு வறுமையான குடும்பத்தின் குழந்தை, ஒரு கிழிந்த

தொட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், வானத்தில் உள்ள நிலா எந்தப் பாகுபாடும் இன்றி அந்தக் குழந்தையின் முகத்தையும் அன்போடு எட்டிப்பார்க்கிறது.

"அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே மேலான ஆன்மீக விழுமியம் ஆகும்" (வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், ப.18)

என்ற கருத்திற்கு ஏற்ப, மனிதர்கள் காட்டத் தவறிய நேசத்தை இயற்கை சாலையோரக் குழந்தைக்கும் சமமாக வழங்குவதை இக்கவிதை நெகிழ்ச்சியோடு பதிவு செய்கிறது.

விடாமுயற்சி

வாழ்வில் எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றைத் தகர்த்துக்கொண்டு மேலே வரும் விடாமுயற்சியை இயற்கை தன் சிற்றுயிர்களின் வழியே தொடர்ந்து போதிக்கிறது. பாறைகளுக்கு நடுவே முளைக்கும் ஒரு சிறு செடி, மனிதனுக்குத் தன்னம்பிக்கையின் மாபெரும் பாடமாக அமைகிறது.

பாறையை உடைத்து

எட்டிப் பார்க்கிறது

சிறு செடி (பாசிக்குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி, ப.36)

கடினமான பாறை என்பது மனித வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தடைகளைக் குறிக்கிறது. மென்மையான ஒரு சிறு செடி தன் தொடர்ச்சியான முயற்சியால் அந்தப் பாறையையும்பிளந்துகொண்டு வெளி வருவது, விடாமுயற்சியின் குறியீடாகும். எத்தகைய இருண்ட சூழலிலும் நம்பிக்கை இழக்காமல் போராடினால் வெற்றி நிச்சயம் என்பதை இயற்கை நமக்கு உணர்த்துகிறது

வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும் தற்காப்பு உணர்வே மனிதனையும் இயற்கையையும் பிணைக்கிறது (தத்துவமும் வாழ்வும், ப.92) என்ற வாழ்வியல் உண்மையை இக்கவிதை வெளிப்படுத்துகிறது.

இயற்கையின் அமைதி

இயற்கையின் சமநிலை அதன் பேரமைதியிலும், அந்த அமைதிக்குள் இயங்கும் உயிரினங்களின் லயத்திலும் அடங்கியுள்ளது. புற உலக இரைச்சல்களிலிருந்து விடுபட்டு, இயற்கையின் மௌன மொழியைக் கேட்கும் போது மனித மனம் அக அமைதியை அடைகிறது.

மழைக்கால இரவு

தவளைகளின் கச்சேரி

அமைதியான குளம் (மழைச்சாரலில் நிலாப் பூக்கள், ப.130)

மழை பெய்து ஓய்ந்த ஒரு இரவில், குளத்தில் தவளைகள் எழுப்பும் சத்தம் அந்தச் சூழலின் அமைதியைக் கெடுப்பதில்லை. மாறாக, அது இயற்கையின் ஒரு இசைக் கச்சேரியாகவே ஒலிக்கிறது. அந்தச் சத்தத்திற்குப் பின்னாலும் ஒரு பேரமைதியை அந்தக் குளம் தன்னகத்தே கொண்டுள்ளது. மனித மனமும் இத்தகைய சலனங்களுக்கு மத்தியிலும் தற்சார்பான அமைதியைக் கண்டறிய வேண்டும் என்பதை இக்கவிதை சுட்டுகிறது.

"இயற்கையை நேசிப்பதும் அதனோடு இயைந்து வாழ்வதும் மனிதனைப் பேரமைதிக்கு இட்டுச் செல்லும்" (சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல், ப.45) என்ற சங்ககால வாழ்வியல் சிந்தனை இக்கவிதைக்கு முழுமையான தத்துவார்த்த விளக்கமாக அமைகிறது. நவீன மனிதன் எந்திரத்தனமான ஓட்டத்தில், தேவையற்ற புற இரைச்சல்களையும் அகக்குழப்பங்களையும் சுமந்துகொண்டு தன் மன அமைதியைத் தொலைத்து நிற்கிறான். ஆனால், இயற்கையை நேசிக்கத் தொடங்கும் ஒருவனுக்கு, தவளைகளின் ஒலி இரைச்சலாகத் தெரிவதில்லை; அது இயற்கையின் இசையாக, உயிர்ப்பின் அடையாளமாக மாறுகிறது.

தன்னைச் சுற்றியுள்ள இயற்கையின் லயத்தோடு தன்னை இணைத்துக்கொள்ளும் மனிதன், தனது செயற்கையான கவலைகள் மற்றும் மன அழுத்தங்களிலிருந்து விடுபடுகிறான். புறவுலகில் எத்தனை சலனங்கள் இருந்தாலும், இயற்கையோடு இயைந்து வாழும் ஒரு பக்குவமான மனிதனின் மனம், சலனமற்ற அந்தக் குளத்தைப் போல எதற்கும் கலங்காத பேரமைதியை அடையும் என்ற உன்னத வாழ்வியல் அறத்தை இக்கவிதையும் மேற்கோளும் ஒருங்கே போதிக்கின்றன.

தொகுப்புரை

ஹைக்கூ கவிதைகளில் இயற்கையும்

வாழ்வியலும் என்னும் பொருண்மையில் அமைந்த இவ்வாய்வு, சமகாலக் கவிதைகள் எவ்வாறு சமூகத்தின் மனசாட்சியாக இயங்குகின்றன என்பதைத் தெள்ளத் தெளிவாக நிறுவியுள்ளது. இயற்கை என்பது வெறும் புறவெளியல்ல. அது மனிதனின் அக உணர்வுகளையும், சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளையும் பிரதிபலிக்கும் மாபெரும் கண்ணாடி என்பதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன. முதியோர் தனிமை, உழைக்கும் வர்க்கத்தின் வலி, சூழலியல் அழிவு, வறுமையின் கொடூரம் எனப் பன்முகத் தளங்களில் பயணிக்கும் தற்கால ஹைக்கூக்கள், மனிதனை மீண்டும் இயற்கை யின் மடிக்கு அழைத்துச் சென்று வாழ்வியல் அறங்களைப் போதிக்கின்றன. மனிதர்கள் இயற்கையின் மௌன மொழியைப் புரிந்து கொண்டு, சக உயிர்களிடம் அன்பு செலுத்த முற்படுவதே உன்னதமான வாழ்வியலாகும் என்பதை இக்கட்டுரை ஆணித்தரமாக நிலைநிறுத்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *மழைச் சாலையில் நிலாப்பூக்கள்*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2024.
2. அமுதபாரதி, *வாழ்வியல் தத்துவங்கள்*, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2005.
3. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *பாசிக் குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
4. குமாரசாமி சோமசுந்தரம், *மனித விழுமியங்கள்*, ரஜி வெளியீடு, இலங்கை, 1995.
5. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *பாசிக் குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
6. த. மல்லிகா, *ஹைக்கூ கவிதைகளில் சமுதாயம்*, பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி, 2012.
7. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *பாசிக் குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
8. முனைவர் ர. ரவிச்சந்திரன், *சூழலியல் சிந்தனைகள்*, மெய்யப்பன் பதிப்பகம், தஞ்சாவூர், 2014.
9. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *பாசிக் குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
10. சு.பாலச்சந்திரன், *புதுக்கவிதையில் குறியீடுகள்*, அன்னம் பதிப்பகம், சிவகங்கை, 2008.
11. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *மழைச் சாலையில் நிலாப்பூக்கள்*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2024.
12. முனைவர் கு.ராஜ்குமார், *தமிழ் இலக்கியத்தில் அறம்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
13. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *மழைச் சாலையில் நிலாப்பூக்கள்*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
14. முனைவர் கு. ராஜேந்திரன், *இக்காலக் கவிதைகளில் இயற்கை*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2007.
15. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *ஊஞ்சலாடும் ஊசித்தும்பிகள்*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
16. ந.சுப்புரெட்டியார், *வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்*, அவ்வை பதிப்பகம், சென்னை, 2004.
17. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக்கோவில் ராஜா (தொகுப்பு), *பாசிக்குளத்தைத் துயிலெழுப்பும் தும்பி*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2023.
18. கு.சகாயராணி, *தத்துவமும் வாழ்வும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
19. புதுவைத் தமிழ்நெஞ்சன், கன்னிக் கோவில் ராஜா (தொகுப்பு), *மழைச் சாலையில் நிலாப்பூக்கள்*, நூலேணி பதிப்பகம், சென்னை, 2024.
20. முனைவர் கு.கவிதா, *சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல்*, பிரணவ் தமிழியல் ஆய்விதழ், புதுச்சேரி, 2022.